# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.

**முன்னிலை: திருமதி.பி.கே.தமயந்தி,எம்,ஏ.,பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**2023 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை**

**இ.ம.எண். 4/2023**
**in**
**அ.வ.எண்.65/2020**

1. செல்வம்

2. ராணி . . . **மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்**

**//எதிராக//**

1. பொன்னுசாமி கவுண்டர் (இறந்தார்)

2. ராஜன் . . . **எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

இம்மனுவானது என்முன்பு 07.08.2023 ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர்/ வாதிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.நந்தகுமார், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:–

மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பு பிரமாணப்பத்திரிக்கையில், மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி என்றும் வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி தாவா இன்று வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும் இந்நிலையில் கடந்த 18.07.2023 தேதியில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பு பிரமாணவாக்குமூலம் தயார்செய்ய வாதியின் வாக்குமூலத்தை பார்வையிட்ட பொழுதுதான் வா.சா.1 ஐ மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை செய்யும்பொழுது தாவாசொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களைப் பொறுத்து குறுக்கு விசாரணை செய்யாமல் விடுபட்ட விவரம் தெரியவந்தது என்றும் எனவே வா.சா.1 ஐ மீண்டும் விசாரணை செய்தால் மட்டுமே மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தை சமூகம் நீதிமன்றத்திற்கு நிரூபிக்க முடியும் என்றும் ஆகவே

மேற்படி மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 2ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிர்மனுஉரையின் சுருக்கம்:-**

2ம்எதிர்மனுதாரர்/வாதிதரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுஉரையில், மேற்படி மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் மனுதாரர்கள், ஏதோ வா.சா1 ஐ மீண்டும் விசாரணை செய்தால் மட்டுமே தனது தரப்பு சாட்சியத்தை சமூகம் நீதிமன்றத்திற்கு நிரூபிக்க முடியும் என்று கூறியிருப்பதும் சுத்தப்பொய்யாகும். உண்மையில் மனுதாரர்களுக்கு மேற்படி மனுவில் நல்ல கட்சி கிடையாது. அதனால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கில் எந்தவிதமான சூழ்நிலைகளும் மாற்றம் நிகழாதபொழுது (No Circumstance Change) வா.சா.1 ஐ Recall செய்ய சட்ட முகாந்திரம் கிடையாது. வா.சா.1 மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்பொழுதே தாவாசொத்துக்களைப் பொறுத்து கேள்விகள் கேட்கப்பட்டுவிட்டது. தற்போது வா.சா.1 ஐ Recall செய்தால் Fill up the Lacuna செய்வதற்காக மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னோடி தீர்ப்பின்படி ஒரு வழக்கில் எந்தவிதமான மாற்றமும் நிகழாதபொழுது சாட்சிகளை Recall செய்யமுடியாது என தீர்ப்புரை பகரப்பட்டுள்ளது என்றும் ஆகவே இம்மனு தள்ளுபடியாக வேண்டும் என்று எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியது என்னவென்றால் மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**4.** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5.** வழக்காவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, அசல் வழக்கு கடந்த 12.07.2013 தேதியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 30.04.2014 தேதியில் வழக்கெழுவினா வனையப்பட்டுள்ளது. கடந்த 10.07.2023 தேதியில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 18 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், 13.07.2023 தேதியில் வா.சா.1 ன் மூலம் நீ.ம.சா.ஆ.1 முதல் 6 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு 18.07.2023 தேதியில் வா.சா.1 ஐ மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்பது வழக்காவணங்களின் மூலம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**6.** வழக்காவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் வா.சா.1 ன் நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்து வா.சா.1 விசாரிக்கப்பட்டு 10.07.2023 தேதியில் வா.சா.ஆ.1 முதல் 18 ஆவணங்களும்,

13.07.2023 தேதியில் நீ.ம.சா.ஆ.1 முதல் 6 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டு, வா.சா.1ன் முதல் விசாரணை முடிக்கப்பட்ட பின்பு 18.07.2023 தேதியில் மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வாசா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்பது வழக்காவணங்களின் மூலம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**7.** மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் தாவாவில் வாதிதரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எந்த ஆவணத்தை பொறுத்து குறுக்கு விசாரணை செய்யப்படாமல் விடுபட்டுவிட்டது என்ற விபரத்தை இந்நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்காமல் மனு மற்றும் பிரமாணப்பத்திரத்தில் உரிய விபரங்கள் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள மனு இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. மேலும், வழக்கில் எந்தவிதமான சூழ்நிலைமாற்றமும் நிகழாத பொழுது வா.சா.1 ஐ Recall செய்ய சட்டமுகாந்திரம் கிடையாது என்ற எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது. ஆகவே மனுதாரர்களின் மனுவில் தகுநிலை இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே மனுதாரார்களின் மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்களின் மனுவை செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 17 ம் நாள் ஆகஸ்டு மாதம் 2023 ம் வருடம் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2023.08.18 10:04:16 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:—</u>**

**இல்லை.**

**<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :—</u>**

**இல்லை.**

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2023.08.18 10:04:22 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**